www.tamilarangam.net

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

## ஈழத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்.




ச. அ. டேவிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

## ஈழத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் திரு. சந்திரகாசனின் தனிப்பட்ட அரசியல் முயற்சிகளைப் பற்றியும், அவருடைய வெளிநாட்டுப் பணச் சேகரிப்புகளைப் பற்றியும் ஈழ இளையர் மத்தியில் இவரால் உருவாக்கப்படும் குழப்பங்களைப் பற்றியும் ஈழத் தமிழ் மக்களுக்கு இவரால் ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் சுட்டிக்காட்டி எச்சரிக்கை கொடுக்கும் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டேன்.

இன்று திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் அரசியல் நடவடிக்கைகளினால் ஈழத் தமிழினத்துக்கு வரக்கூடிய அழிவை ஆராய்கிறேன்.

இப்பகிரங்க வெளியீடுகளால் இவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்க நான் முன் வரவில்லை. அரசியல் பிரமுகர்கள் என்ற அடிப்படையில் ஈழத் தமிழ் மக்கள் பலன் கருதி இந்த விமர்சனத்தை வெளியிடுகிறேன்.

இப்புனிதப் பணியில் எனக்கு நேரிடக்கூடிய விபரீத விளைவுகளை நன்கு உணர்வேன். விடுதலைப் புலிகளை விமர்சித்ததை அடுத்து என்னை மதியிழந்த கிழடு கட்டை என்றதும், சந்திரகாசனை விமர்சித்ததை அடுத்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO) தமது 'எழுச்சி' ஏட்டில் என்னை 'பிற்போக்குச் சக்தி காக்கைவன்னியன்' என வர்ணித்ததையும் அறிவேன்.

இக் கட்டுரையை வரையும்பொழுது பெயரும் ஊரும் கொடுக்க திராணியற்ற விடுதலை வீரன் ஓர் பயமுறுத்தல் கடிதம் அனுப்பியிருக்கிறார். ''அடே பொறுக்கி...முகுந்தனிடம் பணம் வேண்டி சிறையுடைப்பு புத்தகம் வெளியிட்டாய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனி எழுதினால் உன்னை வெட்டிக் 'கொல்லுவோம்'" என்கிறார். தமிழ் ஈழ விடுதலை எங்கே போகிறது என்பதை வாசகர்கள் ஊகித்தறியலாம்.

ஆனால் ஈழ விடுதலைப் பாதையில் எண்ணற்ற துன்பம் நேரிடினும் அஞ்சாது அயராது உழைப்பேன். என் அருமைச் சக ஊழியன் டாக்டர் சோ. இராசசுந்தரம் தம் உயிரையே தியாகம் செய்து விட்டார். பல ஈழத் தமிழ் இளையர்கள் இரத்தத்தால் ஈழ விடுதலையை உறுதிப்படுத்தி விட்டனர். இப்பாதையில் குறுக்கே நிற்கும் தீய சக்திகள் அம்பலப்படுத்தப்பட்டு அகற்றப்பட வேண்டியது அத்தியாவசியம்.

திரு. அமிர்தலிங்கத்தையும், த.வி.கூ. யும் 1978-ல் உத்தியோகபூர்வமாய்ச் சந்தித்தேன். அன்று வசந்தன் என்று அழைக்கப்படும் சந்ததியாருடன் ஈழத் தமிழ் மக்கள் பாதுகாப்புக்கும், புனர் வாழ்வுக்கும் கிராம மட்டச் செயல் திட்டம் வகுத்து இதை நடைமுறைப்படுத்த த.வி.கூ. ஒத்துழைப்பினை வேண்டினேன். பிரபல ஆங்கில சரித்திர ஆசிரியர் ஆர்னல்ட் ரொயின்பீ (Arnold Toynbee) முழு உலகச் சரித்திரத்தையும் ஆழமாய் ஆராய்ந்து சமூக வெற்றிக்கும், முன்னேற்றத்துக்கும் மூன்று அத்தியாவசிய அம்சங்கள் பூர்த்தியாக வேண்டும் என்று திட்டவட்டமாய் நிரூபித்திருக்கிறார். இவை

1. தன்னலமற்ற தியாக சீல தீர்க்கதரிசித் தலைவன் (Messiah)
2. தலைவருடன் இரண்டறக் கலந்து இயங்கும் சிறப்புக் குழு (Elite)
3. தலைவரையும், குழுவையும் ஏகோபித்துப் பின்தொடரும் வெகுசனம் (Co-operative masses)

சந்ததியாரும் நானும் ஈழத் தமிழ் சரித்திரத்தை அலசி ஆராய்ந்து மேற்கண்ட நிலை தந்தை செல்வா காலத்தில் மட்டும் இருந்ததையும் அன்று ஈழத் தமிழினம் தியாக வேள்வியில் சுதந்திரத்தை நோக்கி விரைந்ததையும் நன்கு உணர்ந்தோம்.

வன்னிய சிங்கம், நாகநாதன் மறைவையும் அதன் பின்



த.வி.கூ. வீழ்ச்சியையும் அவதானித்து இதை தடுத்து நிறுத்தவே எமது திட்டத்தை முன்வைத்தோம்.

பல எதிர்ப்புகள், முறையீடுகள் சிக்கல்கள் பின் த.வி.கூ. எமது திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்த பொறுப்பேற்று அதன் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஆதரவளிக்கக்கூடிய கோரிக்கை விட்டது. ஆனால் நடைமுறையில் த.வி.கூ பாராளுமன்ற உறுப்பினர் உற்சாகமின்மையாலும் திட்டமிட்ட முறியடிப்பாலும் எமது புனிதப் பணி முளையிலேயே களையப்பட்டது.

இத்திட்டம் நிறைவேறியிருந்தால் ஈழத் தமிழ் இனத்தின் சமீப காலச் சரித்திரம் வேறு திசையில் சென்றிருக்கும். பதவி மோகங் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மக்கள் கட்டுப்பாட்டில் நின்றிருப்பார்கள். விரக்தியடைந்து வன்செயலில் இறங்கிய இளைஞர் ஆக்கபூர்வ பணியில் தம் வாழ்வின் நிறைவு கண்டிருப்பார்கள். பிரிந்து சிதறி சின்னாப்பின்னப்பட்ட ஈழத் தமிழகம் பின்னிப் பிணைந்து பொலிவுடன் எதிரியைச் சந்தித்திருக்கும்.

த.வி.கூ என்றாவது ஆக்கபூர்வ திட்டம் உருவாக்கவுமில்லை; செயல்படுத்தவுமில்லை. தமது பதவிகளைப் பாதுகாப்பதும், தமக்கு தூபமிடுவோருக்கு சலுகைகள் பெற்றுக் கொடுத்து வாக்குப் பெறுவதும் மட்டுமே அவர்களின் அரசியல் ஞானமாய் இருந்தது.

த.வி.கூ.யுள் இருவகைப்பட்டவர்கள் இருந்ததையும் நாம் அவதானித்திருக்கிறோம். ஒரு சாரார் செயல்திறன் உடையோர். மறுசாரார் சொல் திறன் உடையோர். திரு.அமிர்தலிங்கம் தலைமையுடன் சொல் செல்வர்கள் வீறு நடை போட்டு அடுக்குமொழியில் மக்களை மயக்கி வைத்தனர். செயல் வீரர்கள் பல தந்திரோபாயங்களால் அப்புறப்படுத்தப்பட்டனர்.

முன்னொரு வெளியீட்டில் திரு அமிர்தலிங்கத்தை தந்தை செல்வா என்ற மலை நிழலில் தோன்றிய மடுவென்று வர்ணித்திருந்தேன். இன்று அவருடைய செயல்களைப் பார்த்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேறும், சகதியும் நிறைந்த நாற்றமெடுக்கும் குட்டையென்று சொல்ல வேணடியிருக்கின்றது.

இவர் தலைவர் பதவிக்கு வருவதற்கே பல அந்தரங்க சூழ்ச்சிகளைக் கையாண்டு போட்டியிட்டு எதிரிகளை முறியடித்து முன்னேறியது ஈழத் தமிழ் சமுதாயத்துக்கோர் இழுக்காடு என்றே கூற வேண்டும்.

இவருக்கு முன்னிருந்த தலைவர்களுடைய தராதரத்திற்கும் இவருடைய தராதரத்திற்கும் பல கோணங்களில் பன்மடங்கு வித்தியாசங்களிருப்பதை ஆராய்ச்சியில் அறியலாம். இத் தரக்கேட்டால் ஈழத் தமிழினம் கெட்டழிகிறதென்றால் மிகையாகாது.

தந்தை செல்வா உண்மைக்கும், நேர்மைக்கும், நிதானத்துக்கும், தாழ்மைக்கும் ஓர் சிறப்பான எடுத்துக்காட்டு. உண்மையைக் கடைப்பிடித்ததால் அவரின் அரசியலில் ஏமாற்றமிருக்கவில்லை. மாற்றான் இவரை மதித்து நடந்தான். திரு. அமிர்தலிங்கத்தைப் பற்றி இவ்வாறு கூறமுடியாது. மாற்றான் அவமதித்தான்.

தந்தை செல்வா சிங்கள தலைவர்களுடன் பல ஒப்பந்தங்களைச் செய்து மனிதாபிமான முறையில் ஈழத் தமிழ் பிரச்சினையை தீர்க்கப் பொறுமையாய் எத்தனித்தார். தோல்வியைக் கண்டு கலங்கி தனித் தமிழ் நாடே ஒரே வழி; தெய்வமே துணை என்று சொல்லி மறைந்தார்.

திரு.அமிர்தலிங்கமும், த.வி.கூ.யும் இவருடைய இறுதிக் கட்டளையை ஏற்றார்களா?

1977-ல் ஈழச் சுதந்திரத்தைத் தாரக மந்திரமாய் வைத்துத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று தம் பதவிகளை பாதுகாத்துக் கொண்டனர். துரதிர்ஷ்டவசமாக திரு. அமிர்தலிங்கம் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார்.

1977-ல் அமோக வெற்றி பெற்ற சிங்கள ஐக்கிய தேசியக் கட்சி ''இனவெறியன் ஜெயவர்த்தனாவின்' தலைமையில்



தமிழர்களைக் கொன்று குவித்தான்; கற்பழித்தான்; கொள்ளையடித்தான். பல்லாயிரம் தமிழர்களை எக்கதியும் அற்ற அகதிகளாக்கினான்.

சமீபத்தில் திரு. தொண்டமான் சென்னையில் ஜெயவர்த்தனாவைப் பதவிக்குக் கொண்டு வந்தவன் யான்; அவனைக் காப்பாற்ற நான் என்றும் தயார் என்று கொக்கரித்தார். ஆ! பாழ்பட்ட தமிழினமே. உன் தலைமையின் நிலையென்ன?

திரு. தொண்டமான் த.வி.கூ. ஆதரவால் ஜெயவர்த்தனா பதவிக்கு வந்தான். இன்று ஈழம் எரிகிறது. இந்தியா, அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர் நோக்குகிறது. இலங்கை தொழிலாளர் வர்க்கப் போர் பின்தள்ளப்பட்டுள்ளது.

இவ் விளைவுகளை ஜனாதிபதி தேர்தல் முன் தமிழ் மக்கள் முன்வைத்தோம். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தம் பதவிகளைக் காப்பாற்ற நினைத்தவர்கள் மக்கள் நல்வாழ்வை எள்ளளவும் கவனிக்கவில்லை.

திரு. தொண்டமானின் அனுசரணையில் கருவாக் காட்டுத் தமிழ் சட்டத்தரணிகள் ஆதரவில் சிங்கள வெறியன் ஜெயவர்த்தனாவுடன் திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தைகளில் இறங்கினார். அதுவும் திரை மறைவில் திட்டமிட்ட சதி முறையில் பேச்சு நடத்தினார்.

த.வி.கூ. யின் கைப்பிள்ளையாய்ப் பிறந்து வளர்ந்த சந்ததியாரும், இளையர்களும் தளபதி அமிர்தலிங்கத்தின் அரசியல் குத்துக்கரணத்தைச் சகிக்க முடியாமல் சுதந்திர வேள்வித் தீயில் குதித்தனர்.

டாக்டர் சோ. இராசசுந்தரமும், நானும் 1976-ல் காந்தீயத்தை உருவாக்கி ஈழத் தமிழ் மக்களுக்கு ஓர் அடிமட்ட நிறுவனத்தை கொடுத்து வழி நடத்த அல்லும் பகலும் அயராது உழைத்தோம்.

1977-ல் சிங்கள வெறியனின் இனக் கொலையில் தப்பி வந்த மக்களை ஆதரிக்க பிரபல தொழில் சங்கவாதி கே.சி. நித்தியானந்தன் தலைமையில் தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கழகம் அரும் பாடுபட்டுச் செயலாற்றியது. பல துடிப்புள்ள தமிழ் இளையர்கள் தம் வாழ்வை அர்ப்பணித்து அகதிகளைப் பராமரித்து வந்தனர். காந்தீயம் இவர்களுடன் சேர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட்டது. சந்ததியாரும், சகாக்களும் காந்தீயத்துடன் தொடர்புகொண்டு எமது கொள்கைகளாலும், செயலாலும் ஈர்க்கப்பட்டு எம்முடன் சேர்ந்து உழைத்தனர்.

நாளடைவில் காந்தீயம் மலையகத் தமிழ் மக்களையும், யாழ்ப்பாண இளையர்களையும் ஒன்றிணைத்து வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மக்களுடன் மக்களால் செயல்திட்டங்களை உருவாக்கி தமிழ் ஈழ ஒற்றுமை உணர்வுக்கு வித்திட்டு செழித்து வளர்ந்தது.

1977-ல் பேச்சு வார்த்தையில் இறங்கிய திரு. அமிர்தலிங்கமும் த.வி.கூ ஈழத் தமிழினத்தை 1980-ல் மாவட்ட அபிவிருத்திச் சபைகளென்ற மீளாப் பாழ் கிணற்றில் இறக்கி தம் சகாக்களுடன் ஊழல் சேற்றிலும், சகதியிலும் தோய்ந்து துள்ளத் தொடங்கினார்.

1980-ல் மாவட்ட அபிவிருத்திச் சபைகளையொட்டி வவுனியா நகரசபை மண்டபத்தில் த.வி.கூ. கூடியபொழுது கொடிய வெயிலில் மக்களோடு மக்களாய் வெளியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்வதில் பங்குபற்றியவர் டாக்டர் சோ.இராச சுந்தரம். இதன் விளைவாக திரு. அமிர்தலிங்கத்தினதும், த.வி.கூதும் தீராப் பகையை டாக்டர் இராசசுந்தரமும், காந்தீயமும் பெற்றுக் கொண்டது.

1977-ல் தமிழ் அகதிகள் புனர்வாழ்வில் திரு தொண்டமானும், த.வி.கூ. போதிய பங்கெடுக்கவில்லை என்பதை ஈழத் தமிழினம் கவனிக்க வேண்டும். அவர்கள் சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனாவுடன் இரண்டறக் கலந்து அவனின் புகழ் பாடினார்கள் என்பதையும் நினைவு கூர வேண்டும்.

அகதிகளுக்கு உதவி செய்து கொண்டிருந்த ஈழத் தமிழ் இளையர் அவர்களுடைய துன்ப துயரங்களைத் தாங்க முடியாமல், காந்தீய நெறியிலும் நம்பிக்கை இழந்து ஆயுதப் போரில் குதித்தனர்.



சுந்தரம், உமா மகேஸ்வரன், சந்ததியார் ஒன்றிணைந்து தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை (PLOT) மனிதாபிமான சனநாயக அடிப்படையில் கட்டி வளர்த்தனர். சந்ததியாருடன் காந்தீயத்துக்கு இருந்த தொடர்புகளால் இவர்களின வன்செயல்களைக் கண்டித்தாலும் அவர்களின் சனநாயக வெகுசன அமைப்பில் கவரப்பட்டது. ஈழத் தமிழ் இளையர் ஆயுதப் போரில் குதிக்கும் காலத்தில் சங்கிலியன் வாளை ஏந்திச் சபதம் செய்த த.வி.கூ தளபதி அமிர்தலிங்கம் சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனாவின் காலில் தெண்டனிட்டு பிச்சை கேட்டு நின்றார்.

1981-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதி நியூயார்க் மாநாட்டில் தமிழ் இளையர்கள் வேண்டுகோளுக்கிணங்க திரு. அமிர்தலிங்கத்தின் துரோகச் செயலை அம்பலப்படுத்தினேன்

தாங்க முடியாத உணர்ச்சிவசப்பட்டு என்னை அப்புறப் படுத்த கோரிக்கை விடுத்தார்.

அந்த மகாநாட்டில் ஈழத் தமிழ் தேசீய மன்றமும், ஈழத் தமிழ் பொதுவான நிதியும், செயல் திட்டங்களும் வேண்டும் என்று வற்புறுத்தினேன்.

திரு. அமிர்தலிங்கமும் கூட்ட அமைப்பாளர்களும் திரு. அமிர்தலிங்கத்தின் கோபாவேசத்தில் மூழ்கி ஆக்கபூர்வ செயல் ஆலோசனைகளை மறந்து இன்றுவரை எவ்விதத் திட்டமும் இல்லாமல் அரசியல் சதுரங்கம் ஆடுகிறார்கள் என்பதைத் தமிழினம் நினைவு கூரவேண்டும்.

*ஈழத் தமிழ் இனமே உன் தலைமையின் தராதரம் என்ன? தந்தை செல்வா எங்கே? அவர் பெயரைக் கூறி வயிறு வளர்க்கும் அரசியல் தலைமை எங்கே?*

திரு. அமிர்தலிங்கம் தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது மட்டுமல்ல; சிங்கள, புத்த இன வெறியன் மந்திரி சிறில் மத்தியூவின் பயமுறுத்தலில் தமிழ் ஈழ இளையரையும் நிராகரித்துப் பகிரங்க அறிக்கைகள் விடுத்தார்.

www.tamilarangam.net



1981-ல் தமிழ் மறவன் குட்டிமணியை ஓர் அரசியல் பகடைக்காயாக்கி கபட நாடகம் ஆடித் திரு அமிர்தலிங்கம் அமெரிக்க அனுதாபி நீலன் திருச்செல்வத்தை இலங்கைப் பாராளுமன்றத்திற்குள் நுழைவித்தார். தமிழ் ஈழ இளையர் களுக்குச் செய்த படுபாதகம் இது என்பது என் பணிவான கருத்து.

திரு அமிர்தலிங்கத்தின் மகன் ரவி தமிழ் ஈழ தேசிய இராணுவம் (TENA) அமைத்ததும் திருமதி மங்கயற்கரசி மலேசியா சிங்கப்பூரில் பணம் சேகரித்ததும், கடிதப் போக்கு வரத்தில் மாவை சேனாதிராசா சிங்கள அரசால் கைது செய்யப் பட்டு விடுவிக்கப்பட்டதும் பகிரங்க செய்திகள். கடிதப் போக்கு வரத்தில் அகப்பட்டு விடுபட்டவர்கள் செய்த குற்றத்திலும பத்தில் ஒரு மடங்கு செய்யாத தமிழ் ஈழ இளையர் சித்திர வதைக் குள்ளாகிச் சீரழிய திரு அமிர்தலிங்கத்தின் சகாக்கள் விடுதலை பெற்று இருப்பது திரு அமிர்தலிங்கத்தின் அரசியல் கபட நாடகங்களில் ஓர் சிறப்பு அம்சம்.

1983-ம் ஆண்டு ஜூலை 25, 27-ல் தமிழ் மறவர் குட்டி மணி, ஜெகன், தங்கத்துரை, டாக்டர் சோ. இராசசுந்தரம் உட்பட 53 தமிழ் ஈழப் போராளிகள் வெலிக்கடைச் சிறையில் சிங்களக் கைதிகளால் கொன்று குவிக்கப்பட்டனர். திரு அமிர்த லிங்கமும், த.வி.கூ தம் உயிருக்கு அஞ்சி இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

18 மாதங்களாக இந்திய அரசின் அனுசரணையுடன் சிங்கள வெறியன் ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார், ஆறுவருடங்களாக ஈழத் தமிழினத்தைப் பூண் டோடு அழிக்க அவகாசம் கொடுத்த திரு. அமிர்தலிங்கமும், த.வி.கூட்டணியும் தமிழ் ஈழப் போராளிகளை முறியடிக்க ஆயுதங்களைச் சேர்க்கவும் பயிற்சி கொடுக்கவும் சிங்கள வெறி யர்களுக்கு நேரங்கொடுத்தனர்.



சிங்கள வெறியன் ஜெயவர்த்தனா தான் செய்ய வேண்டிய நாச வேலை யாவையும் செய்து முடித்துவிட்டு வட்டமேசை பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் குற்றங்கள் யாவையும் திரு. அமிர்தலிங்கத்தின் தலையில் குவித்து விட்டு அவர் இலங்கைக்கே போக முடியாத நிலையை உருவாக்கினான்.

ஒரு பாதை மூடப்பட்டால் மறு பாதை திறக்கும் புத்தெடுக் கும் எலிவாழ்வு திரு. அமிர்தலிங்கத்திற்குக் கைவந்த கலை. சில மாதங்களுக்கு முன்பாகவே தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) முகுந்தனைத் தம் பக்கம் சேர்க்க வேண்டிய நடவடிக்கைகளை கையாண்டிருந்தார். 1984 ஆகஸ்ட் மாதத் தில் முகுந்தனை டெல்லிக்கு வரவழைத்து விருந்துபசாரங்கள் செய்து தம்முடன் சேர்ந்து கொள்ளக் கேட்டிருந்தார்.

5-10-1984-ல் திரு. அமிர்தலிங்கம், முகுந்தன் சம்மதத் துடன் த.வி.கூ. செயலாளர் வி. பொன்னம்பலம் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகக் (PLOT) கண்ணன் என்றழைக்கப் படும் யோதீஸ்வரன் சென்னையில் கூடி த.வி.கூ.வும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) ஒன்றுபட்டியங்க சம்மதம் தெரிவித்திருந்தனர். தம் பலத்தை பெரிதாக்கிக் கொள்ள ஈழம் புரட்சிகர இயக்கம் (EROS) ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தமிழ் ஈழம் விடுதலை இயக்கம் (TELO) ஆகிய குழுக்களைத் தம் வலைக்குள் போட சூழ்ச்சிகளைக் கையாண்டனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) அமிர்தலிங்கத்தின் கூட்டுறவை நிராகரித்து விட்டனர். விடுதலைப்புலிகள் வீர வேங்கைகளாய் ஈழப் போரில் வெற்றிகரமாய் முன்னேறிய காலத்தில் த.வி.கூ.க் கவிஞர் காசி ஆனந்தன் தம்பி பிரபா தமிழ் ஈழத்தை மீட்டு அண்ணன் அமிர்தலிங்கம் காலடிகளில் வைப் பார் என்று உருக்கமாகவும் உரிமையுடனும் கூறியிருந்தார். ஆனால் 85ம் ஆண்டு மாசி மாதம் பாவாணர் நூல் நிலையத்தில் நடந்த கூட்டத்தில் முற்றும் முழுவதும் திசை திருப்பி அமிர்த லிங்கம் தம்பி உமா மகேஸ்வரன் (முகுந்தன்) எம்மை ஈழத்துக்கு அழைத்துச் செல்வான் என்று புகழ்பாடினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



த.வி.கூ.யும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தையும் (PLOT) சேர்த்து விட திரைமறைவில் நடந்த சதிகள் மிகவும் சாதுர்யமானவை. இதில் மிகவும் தீவிரமாக இயங்கியவர்கள் பொதுவுடமைக் கொள்கை வித்தக மும்மூர்த்திகள் வி. பொன் பலம், ஈழப் புரட்சிகர இயக்க (EROS) இரத்தினசபாபதி, பொதுவுடமை தத்துவ எழுத்தாளர் கணேசலிங்கம். இந்தப் பொதுவுடமை தத்துவ ஞானிகள் முதலீட்டு மன்னர்கள் பாதுகாவலன் திரு. அமிர்தலிங்கத்துக்காக இரவாய்ப் பகலாய்த் தேடி இடதுசாரி சோசலிசக் கொள்கை தமிழ் ஈழ விடுதலைக் கழகச் (PLOT) செயலதிபர் முகுந்தனை எப்படி வளைத்துப் பிடித்தனர், என்பதை தமிழ் ஈழச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஆராய வேண்டிய விஷயம். வி. பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்வு விசித்திரமானது. இவர் ஈழப் பொதுவுடமைக் கட்சியின் முடிசூடா மன்னன். தந்தை செல்வாவை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவர். த.வி.கூ. ஆறு அம்சக் கோரிக்கை சமர்ப்பித்த காலத்தில் 20 அம்சக் கோரிக்கையைப் போட்டுக் குளறுபடி செய்தவர். பொதுவுடமைக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டு சம்பியாவில் அரசியல் அஞ்ஞாதவாசம் பூண்டவர். தருணத்தைப் பார்த்து வாழ்நாள் கொள்கைகளை காற்றில் வீசி விட்டு த.வி.கூ. செயலாளர் பதவி ஏற்று 1983-ல் நியூயோர்க் மாநாட்டில் கலந்து கொண்டவர்.

இரத்தினசபாபதி ஈழப் புரட்சி இயக்கத்தின் தந்தை. புரட்சியைப் பற்றி சலிக்காது சிந்தித்தும், எழுதியும் வருகிறவர். மாக்ஸிஸ் லெனினிஸ் தத்துவ வித்தகர்.

கணேசலிங்கம் பொதுவுடமைக் கொள்கைகளை அடிப்படையாய் வைத்துப் பல நூல்களை எழுதியும் ஈழத் தமிழ் இளையர்களுக்குப் பொதுவுடமைத் தத்துவம் போதித்தும் வருபவர்.

தமிழ் ஈழ விடுதலைக் கழகம் (PLOT) தம் வெளியீடுகளில் ஆணித்தரமாய் இடதுசாரிப் பாதையை கடைப்பிடிப்பவர்கள். அவர்களுடைய பிரசுரங்களிலும், வானொலியிலும் திரு.அமிர்த



லிங்கத்தையும் த.வி.கூ.யும் படுமோசமாய் விமர்சித்து தமிழ் மக்களின் துரோகியாய் வர்ணித்தவர்கள்.

இன்று திரு அமிர்தலிங்கம் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகச் (PLOT) செயலதிபர் முகுந்தனின் தோளில் தாவிக் கொண்டு அரசியல் பவனி வர முன்வருகிறார். இந்த அரசியல் குத்துக்கரணங்களால் ஈழத் தமிழ் விடுதலையை அடையலாம் என்பது பகற்கனவு. விடுதலை அடைந்தாலும் அர்த்தம் அற்றது.

வசந்தன் என்று அழைக்கப்படும் சந்ததியாரும், நானும் எங்கள் உடல் உயிர் ஆவியை முற்றிலும் அர்ப்பணித்து தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை (PLOT) வளர்த்தவர்கள். ஓர் மனிதாபிமான அடிப்படையில் சனநாயக முறையில் தமிழ் மக்களுக்கு விடுதலைப் பெற்றுக் கொடுத்து இந்து சமுத்திரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முறியடித்து உண்மையான சோசலிச ஆட்சியை ஈழத்தில் நிறுவ அயராது பாடுபட்டவர்கள். எங்கள் இருவருக்கும் தெரியாமல் முகுந்தன் திரு. அமிர்தலிங்கத்துடன் த.வி.கூ. ம் பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறார். நாங்கள் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (PLOT) இருக்கு மட்டும் அமிர்தலிங்கமும் த.வி.கூ. அதில் சேர்த்துக் கொள்வது சாத்தியமாய் இருக்காது. இதற்காக் முகுந்தன் பல சூழ்ச்சிகளைக் கையாண்டு வசந்தனையும், என்னையும் கழகத்திலிருந்து வெளியேற வைத்தார். இதில் அவருடைய செயல்திறனின் கைவரிசையைக் காட்டியிருக்கிறார். காலம் இதற்கு விடை கொடுக்கும். நானும் வசந்தனும் பதவிகள் பட்டங்களை என்றுவது தேடியதில்லை. மனிதாபிமான சனநாயகக் கொள்கைகளுக்காகவே போராடுகிறோம். அந்த வழியில் இருந்து என்றுவது விலக மாட்டோம். அரசியல் குத்துக்கரணங்கள் எங்கள் சக்திகளுக்கு அப்பால்பட்டது.

இன்று பல தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) முன்னணி அங்கத்தவர்கள் கழகத்திலிருந்து வெளியேறுகிறார்கள். திரு. அமிர்தலிங்கத்தின் சூழ்ச்சியால் பல இளையர்கள் உயிரைக்கொடுத்து வளர்த்த கழகம், (PLOT) பிளவுபட்டுச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் ஈழ விடுதலைக் கழகத்துக்கும் (FLOT) விடு
சீரழிகிறது. தமிழ் ஈழ விடுதலைக் கழகத்துக்கும் (FLOT) விடு
தலைப் புலிகளுக்குமிடையில் (LTTE) எதிர்ப்பு வலுவடைந்து
போர் வடிவமெடுக்கிறது.

தமிழ் அரசியல்வாதிகளினதும், இப்போ தமிழ் போராளி
களினதும் திக்குத் திசையற்ற பதவி மோகக் கொள்கைகளும்,
செயல்களும் ஈழத் தமிழ் மக்களையும், தமிழகத்தையும், உலகத்
தமிழர்களையும் ஏமாற்றத்திற்கும், ஏக்கத்திற்கும் உள்ளாக்கு
கிறது.

ஈழத் தமிழினம் அழிய வழிவகுத்த அப்பாப்பிள்ளை
அமிர்தலிங்கம் ஈழத் தமிழ் இளையர் அழிய வழிவகுப்பார்
என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தந்தை செல்வாவின் உண்மை, நேர்மை, நிதானம்,
விவேகம், தாழ்மை, என்ற குணங்களால் ஈழத் தமிழ் இனம்
அடிமைத் தளையில் இருந்து விடுவிக்கப்பட்டது. அவர் வழியில்
சென்று விடுதலை காண்பதல்லாது கள்ளம், கபடம், சூழ்ச்சி,
அகங்காரம் என்பவற்றால் சுதந்திரம் கிட்டாது. கிடைத்தாலும்
அர்த்தம் அற்றது. தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தில் (PLOT)
எம் நம்பிக்கை யாவையும் வைத்திருந்தோம். இன்று அக்
கழகத்தில் நடக்கும் அட்டூழியங்களைக் கண்டு கண்ணீர்
வடிக்கிறோம். திரு.அமிர்தலிங்கத்துக்கு இச் சூழ்நிலை மிகவும்
சாதகமாயிருக்கும்.

நாம் மனம் தளரவில்லை; உண்மைக்கும், நேர்மைக்கும்
மனிதாபிமானத்துக்கும், சனநாயகத்துக்கும் வேறொரு கழ
கத்தைக் கட்டி எழுப்பி ஈழத் தமிழ் விடுதலைக்கு உழைப்போம்
என்ற உறுதிமொழியைத் தமிழ்மக்களுக்குக் கொடுக்கிறோம்.

ச. அ. டேவிட்

எழுதி வெளியிடுவது :

ச. அ. டேவிட்

B. Arch; Dip., T.P. A.R.I.B.A; A.R.T.P.I.
கட்டிடக் கலைஞர், நாடு நகரமைப்பாளர்,
தலைவர், காந்தீயம், இலங்கை.

விலை :

| | |
|---|---|
| இந்தியா | ரூபா 1/- |
| இலங்கை | ரூபா 2/- |
| இதர நாடுகள் | U.S. $ 1. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்